## பத்திரிகை செய்தி

## <u>தமிழ்நாடு ஓய்வூதியர்கள் இணையதளம் வழியாக மின்னனு உயிர்வாழ் சான்று (Digital Life Certificate) அளித்தல்</u>

தமிழ்நாடு அரசு கருவூலங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மூலமாக ஓய்வூதியம் பெறும் அரசு ஓய்வூதியர்கள் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 1 முதல் ஜூன் 30-க்குள் கருவூலகத்திற்கு நேரில் ஆஜராக வேண்டும் அல்லது தங்களது உயிர்வாழ் சான்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வருடம் முதல் கூடுதல் வசதியாக ஜீவன்பிரமான் (Jeevan Praman) என்ற மத்திய அரசின் உயர்வாழ் சான்றினை பெற்று கருவூல இணையதளத்தில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு இ-சேவை மையங்கள் மூலமாகவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஜீவன்பிரமான மூலம் மின்னனு உயிர்வாழ் சான்றிதழ் கருவூலத்தில் அளிப்பதற்கான நடைமுறைகள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு கேபிள்டிவி நிறுவனத்தின் இ-சேவை மையத்தில் தங்களது எண்ணை தெரிவித்து, கைவிரல் ரேகையைப் பதிவு செய்து, ஓய்வூதியம் தொடர்பான தகவல்களை தெரிவித்தால், அவர்களுக்கு மின்னனு வாழ்வு சான்றிதழ் அச்சிட்டு வழங்கப்படும். இதற்கு சேவைக் கட்டணமாக ரூ.10/- (ரூபாய் பத்து மட்டும்) இ-சேவை மையத்தால் வசூல் செய்யப்படும்.
2. கீழ்கண்ட விபரங்களை அரசு சேவை இ-சேவை மையத்தில் அளிக்க வேண்டும்.

   (i)ஆதார் எண்.

   (ii). ஓய்வூதியம் கொடுவை எண்.

   (iii) ஓய்வூதியம் அனுப்பும் அலுவலக விபரம்.

   (1) ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் (PPO) அல்லது

   (2) மாவட்டக் கருவூலம் (District Treasury) அல்லது

   (3) சார்நிலைக் கருவூலம் (Sub Treasury)

ஜீவன்பிரமான இணையதளம் மூலமாக அனுப்பபடுகின்ற உயிர்வாழ் சான்றுகள் உரிய கருவூலத்தில் ஓய்வூதிய அலுவலகத்தில் சரிபார்த்து பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

ஜீவன்பிரமான் இணையதளத்தில் உயிர்வாழ் சான்றினை, ஓய்வூதியர்களுக்கு உரிய வசதிகள் இருப்பின் தனிப்பட்ட முறையிலும் மின்னனு உயிர்வாழ் சான்றினை ஜீவன்பிரமான் மூலமாக அளிக்கலாம். அவை கருவூலத்தில் சரிபார்க்கப்பட்டு உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படும்.